**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண் – 27/2021**
**CNR No:TNAL05000053-2021**

**கண்ணன்** – வாதி

/எதிர்/

1. செந்தில்குமார்
2. ராஜா – பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான அனுபவத்தில் இப்பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அல்லது ஏஜெண்டுகளோ அத்துமீறி எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமலும், ஆக்கிரமிக்காமலும் இருக்க வேண்டி வாதிக்கு சாதகமாக பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவு தொகை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கவும், இன்னும் சமூகம் கோரட்டார் அவர்கள் தம்யுக்தமாக தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் வாதி பிரார்த்திக்கிறார்.

இவ்வழக்கானது 06.08.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சத்தியசீலன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.பழனிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியலில் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை அவசியமானது. வாதி தனது தரப்பு விசாரணையை துவங்க முன்வரவில்லை. எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எல்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

-இல்லை-

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

-இல்லை-

ஒப்பம்/- திரு.S.கணேஷ், எம்.காம்., எல்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.